1992 செப்டம்பர் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூரில் அமையவிருக்கும் மின்னணு நகரத்தில் தமிழ்நாடு முழுவதும் படித்து வேலையில்லாதப் பட்டதாரிகளுக்கு அங்கு வேலை வாய்ப்பு கிடைக்கிற விதத்தில் முனனுரிமை கொடுத்து அவர்களுக்கு தொழில் துவங்குவதற்கு நிதியும், உதவியும் அளிக்கத் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்னணு நகரம் என்பது ஒரு ஸ்பெஷலைஸ்டு பீல்ட். ஏற்கெனவே நான் சொனனது போல 10 ஆயிரம் பேர்களுக்கு அங்கு வேலை வாய்ப்பு கொடுக்க வாய்ப்புள்ளது. எனவே, தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 23, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

23—

பரிசுச்சீட்டு விற்பனையை அதிகரிக்க சிறப்புத் திட்டம்.

*9942—டாக்டர் ஜெ. பரந்தாமன்:

மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுகள் (லாட்டரி) விற்பனை குறைவாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பரிசுச் சீட்டுகள் விற்பனையை அதிகரிக்க சிறப்புத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்..

(ஆ) பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிப்பதற்கான வழி வகைகளை ஆராய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி அரசு அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப் பட்டுள்ளது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநில பரிசுச் சீட்டுகள் விற்கின்ற அளவிற்கு தமிழ்நாடு பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டிலும் வெளி மாநிலங்களிலும் விற்கப்படுவதில்லை. வெளி மாநில சீட்டுகளில் பல போலிகள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் வெளி மாநில பரிசுச் சீட்டுக்களை வாங்குபவர்களுக்குப் பரிசுகள் விழுவது இல்லை. அரசியலிலும் பொது வாழ்விலும் பல போலிகளை ஒழித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வெளி மாநில பரிசுச் சீட்டுக்கள் தமிழகத்தில் விற்கப்படுவதைத் தடை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்துடன் வெளி மாநில பரிசுச் சீட்டு விற்பனையைத் தடை செய்து அரசு ஆணை எண் 1101, நிதி (பரிசுச் சீட்டு) துறை நாள் 6–10–1989-ன்படியும் அரசு கடித எண் 59482, நிதி'89, நாள் 13–2–1991-ன்படியும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி அரசாணையை எதிர்த்து சில தனியார் மற்றும் பிற மாநில அரசுகள் உச்ச நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெற்று தமிழ்நாட்டில் தொடர்ந்து பரிசுச் சீட்டுக்களை விற்பனை செய்து வருகின்றனர். எனவே தமிழ்நாடு பரிசுச் சீட்டு விற்பனை எதிர்பார்த்த அளவுக்கு அதிகரிக்கவில்லை. உச்சநீதிமன்றத்தினுடைய தீர்ப்பு கிடைத்ததற்குப் பிறகு, அதற்கேற்றவாறு தக்க நடவடிக்கையை தமிழக அரசு மேற்கொள்ளும்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் உயிருக்கும் மேலாகக் கருதும் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மக்கள் நல்வாழ்வுத் திட்டம் புரட்சித் தலைவி மருத்துவத் திட்டம் போன்றவற்றோடு உடல் ஊனமுற்றவர்கள், ஆதரவற்ற பெண்கள் நலத்திற்காக கண்ணைக் கவரும் வகையில் பரிசுச் சீட்டுக்களை அச்சடித்து பிரதி மாதம் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்த அரசு முன்வருமா? அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கும்போது, தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுக்களைச் சேர்த்துத் தர அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுச் சீட்டின் மூலம் கிடைக்கின்ற தொகையிலே மிஞ்சுகின்ற தொகை பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆகவே பரிசுச் சீட்டு விற்பனை தமிழகத்தில் ஒரு முனையில் வைத்து விற்கின்றபோது அதற்குப் பல இடைஞ்சல்கள் இருக்கின்ற போது அந்த விற்பனையைப் பரவல் ஆக்கி பல்வேறு வகையிலும் வைக்கிறபோது நிர்வாகச் செலவு அதிகப்படும். அதற்கான செலவுகள் அதிகமாகும்போது வருமானம்

1992 செப்டம்பர் 22]

குறையும். எனவே வெளி மாநிலங்களிலிருந்து வெளியிடப்படுகிற பரிசுச் சீட்டுக்களைத்தடை செய்வதன் மூலம் அதிகமான தொகை தமிழக அரசுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழக அரசுக்கு இருக்கிறது.

முற்பகல் 9—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திர சேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு ஆண்டுதோறும் இந்தப் பரிசு சீட்டுக் களால் பெறும் வருமானம் எவ்வளவு? அதைப் பற்றி மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்துக்காட்டாக 1989—90ல் தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டைப் பொறுத்த வரையில் மொத்த வருவாய் 13 கோடியே 16 இலட்சம் ரூபாய். ஆனால் அதிலே நிர்வாகச் செலவு, ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கிற பணம், பரிசுச் சீட்டுகளுக்கு வழங்குகின்ற தொகை ஆகியவைகள் 10 கோடியே 74 இலட்சம் ரூபாய் ஆகிறது. ஆக நிகர வருவாய் 2 கோடியே 42 இலட்சம் ரூபாய் அரசுக்குக் கிடைக்கிறது. அதிலே இருந்து 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் விற்பனை வரியாக செலுத்தப்படுகிறது. அதேபோன்று 1990—91இல், 18 கோடியே 74 இலட்சத்திற்கு மொத்த விற்பனை. செலவுகள் 15 கோடியே 60 இலட்சம். ஆக நிகர இருப்பு 3 கோடியே 14 இலட்சம் ரூபாய். அதிலே அரசுக்கு விற்பனை வரியாக செலுத்தியுள்ளது 1 கோடியே 65 இலட்சம் ரூபாய். அதே போன்று 1991—92ல் மொத்த விற்பனை 15 கோடியே 32 இலட்சம். செலவு 12 கோடியே 82 இலட்சம். நிகர வருவாய் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய். ஆக அரசுக்கு வரியாக செலுத்தியுள்ளது 1 கோடியே 31 இலட்சம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு பரிசுச்சீட்டிலே கடந்த மூன்று குலுக்கல்களாக இரண்டு ரூபாய் சீட்டுக்கள் விற்கப் பட்டன. அதில் அரசால் விற்கப்படாத சீட்டுகளுக்கு பரிசு விழுந் திருக்கின்றது. பரிசுச்சீட்டுக்கள் வாங்கிய ஏழை மக்கள் இத் னால் ஏமாற்றத்தை அடைந்திருக்கிறார்கள். விற்காத சீட்டுக்

களை நீக்கி குலுக்கல் நடத்த வேண்டும். அல்லது அந்த சீரிஸ் ஆஃப் டிக்கெட்ஸ் விற்று முடியும் வரை அடுத்த சீரியலை ரிலீஸ் செய்யாமல் இருப்பதைப்பற்றி அரசு பரிசீலிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று ஒரு கருத்து அரசினிடத்தில் நிலவிவருகிறது. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அது நடைமுறைக்கு கொண்டு வர முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் கருதுகிறேன். அதைப் பற்றி ஆலோசனை நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மேலும் சிறப்பாகவும், நல்ல முறையிலேயும் விற்பனை செய்து அதன் மூலம் நல்ல வருவாய் திரட்டுகின்ற வழிவகைகளை காணுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வணிக வரிச் செயலாளர், நிதிச்செயலாளர் மற்றும் பரிசுச் சீட்டு இயக்குநர் ஆகிய மூன்று பேர்களையும் கொண்ட குழுவினை அரசு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கையும், பரிந்துரையும் வந்து சேர்ந்த பிறகு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, திரு. ஏ. எம். பரமசிவன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

24—

வாடிப்பட்டியில் சார்நிலை நீதிமன்றம்

*9099—திரு. ஏ. எம். பரமசிவன்:

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் சார்நிலை நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் சார்நிலை நீதிமன்றம், சப்-கோர்ட் அமைக்க அரசு நடவடிக்கை எதுவும் இல்லை.

திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் தாலுக்கா ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ 7 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. அதிலேயும் சுற்றியுள்ள இடங்களில் கிராமப்பகுதிகள் இருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் மதுரை செல்ல வேண்டும் என்று